உ

சிவமயம்.

ஸ்ரீ பழனியாண்டவர்

தரிசனக்கும்மி

என்னும்

சுப்பிரமணியர் தரிசனக்கும்மி.

இஃது,
கொங்குநாட்டில் திருவவிநாசி
திருமுருகன் பூண்டி என்னும் இருதலங்களுக்குத்
தென்பால்
கணியாம்பட்டிக் கிராமம் சின்னாண்டிபாளையத்தில்
செங்குந்தர் வமிசத்தில் அன்னதானச்சோழன்
மரபினரும் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள்
சிஷ்யவருக்கத்துள் ஒருவரும் ஆகிய
இராமமுதலியார் குமாரர்

இராயப்பமுதலியாரால்

இயற்றப்பட்டு,

கோயமுத்தூர் - புஸ்தகவியாபாரம்

பேவீரகவுண்டரால்

சென்னை,
இட்டா
குப்புசாமி நாயுடு
அவர்களது
குவலயரஞ்சனி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1888.

ROJA MUTHIAH



உ

சிவமயம்.

விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது யாதெனில் கோயமுத்தூர் பெரியகடைவீதி தென்புறம் சிரேணி 49 - வது நெம்பர் புஸ்தகக் கடையில் தமிழ் தெலுங்கு கிரந்தம் முகம்மதுமார்க்கப் புஸ்தகங்களுடன் சோதிடவைத்திய வேதாந்தமுதலியவை, விலை சகாயமாக விற்பதுடன், அச்சிட்டுக்கொடுப்பதற்குவரும் புஸ்தகமுதலியவற்றை அச்சிட்டதா அதிக சுளுவான சார்ஜ்பெற்றுக்கொண் டச்சிட்டுகொடுக்கப்படும். இப்போது நூதனமாய் மலையாளம் வைத்தியர் ஒருவரால் அச்சிடப்பட்ட அகஸ்தியர் பூரணகர்வியம் கலிகோபவுண்ட் விலை ரூபாய் (க) தபால்சார்ஜ் அணா (கஉ)தேவையானவர்கள் அடியில்கண்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இ. ஒன்னையன்
புஸ்தகஷாப்
கோயமுத்தூர்.

சர்வதாரிவருஷம்
கார்த்திகைமீ.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

ஸ்ரீபழனியாண்டவர் தரிசனக்கும்மி

என்னும்

சுப்பிரமணியர் தரிசனக்கும்மி.

காப்பு - நேரிசைவெண்பா.

ஆதிதரும்பழனி யாறுமுகத் தெம்மான்றன்
பாத மதிலடியேன் பைந்தமிழாற்—றீதணுகாக்
கும்மி சிலபாடக் கோருஞ் சிவகாமி
தம்மகனு மானையிரு தாள்.

சிவபெருமான்றுதி.

அருவுருவா யுபயமுமா யல்லதுமா யறிவறியா வதீதமாகித்
திருவருளா லுலகுயிர்யாவையும் புரப்பானைந்தொழிலே செய்வானாகி
மருமலரா னரிபலநாள் நிலமுயர்வான் புகுந்தறியா மாதேவாகி
வருமடியா ருளமலர்வாழ் சிவபெருமா னிணையடியா மனத்துள்வைப்
[பாம்.

உபாசனாமூர்த்தி.

தெய்வமறையுணர்ந்தவர்கொள்ளறுசமயங்களாறுமுகமாய்த் தெரிவித்தாங்கே, சைவமறிவார்கொளிரு ஞானங்க ளீரடியாய்ச் சமயக்காட்டி, யுய்வகையீதறிமினெனற் சேவடியேமுத்தியென வொருகைகாட்டிச், செய்வழியீதெனவொருகை புணர்த்துமுருகையனடி சென்னி சேர்ப்பாம்.

அவையடக்கம்.

முத்திதருங்குமரேசன் றருதமிழோர் சிறிதுணராமூகன்யானே, பத்திதலைக்கொண்டடியார் பரவிடுமெம்பகவன்மேற் பாடும்விந்தை, சித்திரஞ்சே ரெம்பெருமான் மயிற்பரிசெய் நடங்கண்டு சேவற்கோழி, கத்திநடித்திடுதல்போன் மாதலினா லாசைவெட்கங் காண்பதுண்டோ.

வேறு.

தற்சிறப்புப்பாயிரம்.

கொங்குசெறி தெங்குகமு கெங்கணுஞ் சூழ்தரக்
குளிர்சோலை வளர்கொங்கினில்
குமரகுருபரமுருகன் பூண்டிக்கடுத்திலகு
குமாரனெனு முதலிநகரில்
தங்கிவளர்செங்குந்த னன்னதானச்சோழன்
றன்மரபில் வந்தசெல்வன்
தக்ககாமாட்சியிரு பாதமலர்சிரங்கொண்டு
தமிழ்பாடும் ராயப்பனான்
செங்கைவேல்முருகனார்தரிசனக்கும்மியைச்
செப்பினேன் கலியுகத்தில்
சேர்ந்தநாலாயிரத் தோடுதொள்ளாயிரம்
திகழுமெண்பத் தொன்பது
பொங்குமிசைபெறுசர்வ சித்துவருடத்தினிற்
புலவர்பிழைபொறுத்தாளவே
போற்றினேனவர்கள் பாதமலருஞ்சென்னி
புனைந்துமிதுபுவிவாழ்கவே.

செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901
https://senguntharmudaliarhistory.blogspot.com

ஒயிற்கொம்மிகள்.

முந்திவருந் தொந்திநாயகனே - முதல் - மூர்த்திகள் மூவர்க்கு முன்னவனே, முந்திக்கனி-தந்தைக்கெதிர்-சொந்தப்பட -வந்துறவ- மூஷிகவாகனமுன்னடவாய். (க)

தேசிகனைக்கண்டும் ஆசைமிகக்கொண்டு- தெரிசனக்கும்மியான் பாடுதற்கு, சிறியேனிட-குறைபாறிட- வருவாய்குரு - பரனே துணை- செல்வக்கணபதிமுன்னடவாய். (உ)

சித்திபெறும் நவவீரர்குலத்துளே-செங்குந்தர்பால்வருசேயெளி யேன், செயமேபெறு-மயில்வாகன-ஒயிலாகவே-வயமாகிரி-தெரிசனை தந்தென்னைக்காத்தருள்வாய். (ந)

சித்திவிநாயகன்சோதரனே-சிவ - சத்திசுதாசுரர்ஆதரனே, சிறி யேன்தமி-ழறியேன்பொருள்-குறியேன்வெகு-வெறியேனிதம் - சேய் னைக்காப்பதுன்பாரமையா. (ச)

வாரணவாசிக்கொழுந்தனையம்பிகை- மைந்தனேயுன்பாதம்பி வந்தேன், வாசுந்தர-னேசெந்தமிழ்-வீசுந்துணை-யேசந்ததம் -வாலை மனோன்மணிதன்சுதனே. (ரு)

காஞ்சிவளருங் காமாட்சிதன்சேயனே-கண்டமதுரைமீனாட்சிபா லா, களிகொண்டுநல்-வழிதந்தருள்-விழிநேர்மிக-வொளிதந்திணிக்-கா சிவிசாலாட்சிதன்சுதனே. (சு)

எல்லோருமாய்க்கும்மிபாடிடுவோம்கந்தன்- வல்லமைகள்சொல் லியாடிடுவோம், எதிராகவே-யதிர்வேலொடு-கதிர்கூசவந் -திதஞ்செ ய்குவன்-இன்பமாய்ப்பாடுங்கள்சாதுக்களே. (எ)

பரிசுத்தமாகவேதரிசனக்கும்மியைப்-பாடுவோமெல்லோருங்கூ டியிங்கே, பாவித்திட-மேவித்தமிழ்-சோவித்திட-நாவிற்சொலிப்-பத் தியாயெல்லோருஞ்சுற்றிவந்து. (அ)

கும்பிடுங்கள் அய்யாகும்பிடுங்கள்-நம்ம- குருசுப்ரமண்யனைக்கும்பிடுங்கோ-குருவேலவர்-ஒருதேர்மிசை-தெருவீதியில்-துரைபோல்வர-கும்பிட்டுக்கும்மியடித்திடுங்கோ. (௯)

செகரட்சகன்என்றுஉலகத்திற்பேர்பெற்று- தென்கிரியில்வளர்பண்டிதனே,செகமோகன-சிகிவாகன-குருநாதனி-வருவாய்துணை- சீக்கிரம்வந்தென்னைக்காத்தருள்வாய். (௰)

காரணமூர்த்தியென்றுலகத்திற்பேர்பெற்ற- கந்தனேயெந்தனைக்காத்திடுவாய்-கயிலாயமே-யயலாகவெ-மயிலேறிவந்தொயிலாகவே-காப்பதுன்பாரமாங்காங்கேயனே. (௧௧)

சூராதிசூரனைவென்றகுமரேச-சுப்பிரமண்ணியனேமெய்ப்பொருளே, சுழல்பேயனேன்-விழிநேரிலெ- யொளிதந்துநீ -யெளிவந்தருள்-சோரவிடாதெனைக்காருமையா. (௧௨)

நாற்கடற்கப்புறம்பாற்கடல்மேற்றுயில்- நாரணனார்மகிழ்நன்மருகா, நளினம்புனை-விழியிற்சிறி-தளிதந்தரு-ளெளியற்கினி- நாதனேயுன்பாதம்நம்பினேனே. (௧௩)

நக்கீரதேவரும்பூதத்தின்கைபட்டு - நற்றமிழாற்றுப்படைசொலவே-நானே் துணை-யானேனென-மேனாள்வரு-கோனேயொரு-நாயேன்றனையிப்போகாத்தருள்வாய். (௧௪)

எத்தேசகாலமும்வற்றுக்கடல்போலே- சித்தம்வைத்தாளுவாய்முத்தயனே,எளியேனிட-விழிநேரினில்-ஒளியேபெற-தெளிவாயினியேழையைக்காப்பதுன்பாரமய்யா. (௧௫)

எத்தனை குற்றம்நான்செய்திடினும்-பொறுத்- தத்தனேசந்ததம்காத்திடுவாய்,எதிப்படி-வாதிப்பதும்-சோதிப்பதும்-சாதுக்களை - யென்னுளுங்காப்பதுன்பாரமையா. (௧௬)

பார்வதியீன்றருள்ஐங்கரன்றம்பியே-பஞ்சாக்கரஞ்சொலும்பண்டிதனே,பழனிபுரி தனிலேவுள்ர்-குகனேயொரு-சிகிவாகன-பாலுடன்பாக்கியந்தந்திடுவாய். (௧௭)

சம்புசதாசிவசங்கரனின்றருள்-சத்திவடிவேற்பஞ்சாக்கரனே, தருணம்மிது-சரணாகதி-வருவாய்குரு-பரனேதுணை- தஞ்சம்நீயாகும்பன்னிருபுயனே. (௧௮)

வள்ளிமான்தெய்வயானைமணவாளா-வடிவேலெடுக்குஞ்சடாக்கரனே, வருவாய்குரு-கருணாகர-சரணாகதி-தருவாய்வரம்-வாலசுப்ரமண்யாநீதுணையே. (௧௯)

பங்குனிவைகாசி தைமாதந்தன்னிலே - பழனித்திருவிளாவாகுமென்று, பத்தியர்கவே-எத்திசையிலும்-முத்தர்சித்தர்கள்-பத்தர்போற்றிடும்-பாதத்தைக்காணவரமருள்வாய். (௨0)

முத்துக்காளித்தரகன்சொத்தைச்செலவிட்டு - முதலாங்கொடிகட்டபொன்கம்பமும், முத்தசுத்தர்கள்- பத்தர்போற்றிடும் - மூர்த்தியாமலர்-ஆத்திசூடிய-முக்கண்நடேசனைப்போற்றிப்பின்பு. (௨௧)

திருவாவினன்குடிதன்னிலிடும்பேசன்-சீர்சபைதரிசனஞ்செய்தபின்பு, திருநாளென-வறியும்படி-அறைபேரிகை-கரியேறிடச்- சேவற்கொடிபோனுஞ்சித்தம்வைத்தார். (௨௨)

திருவாவினன்குடிப்பொற்கம்பங்கொடிகட்டு-செங்குந்தர்கையால்நடத்திவைப்பாய், திருமான்மகிழ்-மருகாகுரு-பரனேயருள்-தருவாய்ஜயம்-செங்குந்தர்மங்காமற்காத்தருள்வாய். (௨௩)

எட்டுத்திருப்பணிப்பட்டயம்செப்பேடு - இருக்குதேசுபாதீனம்கையெழுத்தாய், எதிராளிகள்-இதாரளினில்-கதியாதவர்- அதமாகிடஎங்கள்மிராசைநடத்திவைப்பாய். (௨௪)

ஆறுகாற்பீடத்தபிஷேகமாகிப்பின்- யானைமீதேறவருள்கொடுத்தாய், அதுபோகுமோ-விதுநீதியோ-புதிதானவர்-மிதமீறிடல் - ஆறுமுகத்தேவேகாத்திடுவாய். (௨௫)

அவரவர்சிந்தையிற்கேழ்க்குமனுத்தந்து- ஆதரிக்குஞ்சுவாமிநீரல்லவோ, அன்மேயொரு-கனிபோலவெ-மினேவென்பசி- இலந்திரவே- ஆதரித்தாளும்அறுமுகனே. (௨௬)

மைந்தனழுங்குரல்கேட்டவுடன்மாதா-வந்துபால்தந்துவளர்ப்ப துபோல், வயணத்தொடு-பயனற்றிடும்-அயனைச்சிறை- செயுமுத்தம வந்தெனைக்காத்தருள்கந்தையனே. (உஎ)

உன்பாதம்நம்பினேன்உலகாள்முருகையா-உத்தமனேயுந்தன்சித் தம்வைத்தாள், உலகோர்களில்-பலபேருயர்-திருநாளினில் -வருவார்க ளே-உந்தனைக்காணவரமருள்வாய். (உஅ)

ஊருக்குள்காவடி முத்திரித்துப்பலர்- உன்பாதங்காணவேவந்தி டுவார்,உருதிப்படு-கிருபைக்கடல்-வரம்வைத்தருள்-தரிசித்திட உன் பாதந்தந்தென்னைக்காத்திடுவாய். (உகூ)

தென்கயிலாயமாம்பழனிப்பதிவளர் தேசிகன்திருநாள்வருகுதெ ன்று, தேசத்தவர்-வாசத்தொடு-நேசங்கொடு- பூசித்திடத் - திக்குள் ளோர்காவடிமுத்திரிப்பார். (௩0)

அரகரமுருகையாநீ துணையேயென்று - ஆனந்தக்காவடிதானெடு த்து,ஆட்டத்துடன்-கூட்டத்தொடு- பாட்டெத்தினை - கேட்டிப்புறம் ஆசாரத்தோடங்குவந்திடுவார். (௩க)

இறங்கினதானத்தில்பலகாரபட்சணம்- எத்தினையோபச்சைப்ப ட்டினியோர், இரவும்பகல்-கிரிகண்டிட-இனிபெண்டிசை- சனமுந்தி ட-வெல்லோரும்பட்டணம்வந்திடுவார். (௩உ)

சேர்ந்தபேரெல்லோரும்நன்னதிநீராடிச்- சீக்கிரங்காவடிதோளி ல்வைத்து, திருமாமகள்-தருசேயென-தெருவீதியில்-வருவாரவர் சிங் காரம்பாருங்கள் சாதுக்களே. (௩௩)

கோடிகோடிசனம்காவடிதாங்கிய- கொண்டாட்டம்பாருங்கள்ப ட்டணத்தில், கூட்டத்தினி-லாட்டத்தொடு-பாட்டெத்தனை-கேட்டிப் புறம்-கோயிற்சிங்காரங்கள்பாருமையா. (௩௪)

தஞ்சந்தஞ்சமென்று அஞ்சலிசெய்குவார்- சண்முகநாதனைக்கும் பிடுவார், தனதந்தன-மெனவந்திடு-நடனம்பயில் - திடனுங்கொடு சந் தோஷமாய்ச்செல்லுஞ்சிங்காரம்பார். (௩௫)

சத்தசமுத்திரப்பூமியிலுள்ளவர்- சர்க்கரைக்காவடி தோளில்வைத்து, சரணாகதி-பானேதிரு-முருகா துணை-வருவாயெனும் சப்தங்கள் பாருங்கள்சாதுக்களே. (௩௬)

மலையாளர்பத்தியும்மாவேகக்காவடி - வருகிறபெருமையும்பாருமையா, வருவோர்களு-முருகாவென-திரிலோகமு-மதிரும்படி -வருகிறசிங்காரம்பாருமையா. (௩௭)

எக்காளம்பேரிகை தம்புருவீணைகள்- எங்குந்திருக்கூட்டஞ்சங்கீதமும், எதிராகவே-சதிராடுது-விரிவாகவே-சனம்நாடுது யெங்கெங்தவதிசயம்பார்ப்பமய்யா. (௩௮)

அந்தத்துடன்ராகம் மோகனங்கல்யாணி அரிவையர் சுதிகூடிப் பாடுவதும், அதிமோகன-ரதிபோலவெ-குயில்வாய்மொழி - யிசையாமென ஆனந்தம்பாருங்கள்சாதுக்களே. (௩௯)

கருவியுடன் இசைசுரம்வைத்துப்பாடுற-கன்னியைப்பாருங்களுன்னிதமாய், கதிர்வேலவர்-திருநாளினில்- தெருவீதியில் - வருவார்சிலர்-கண்கொண்டுபார்க்கவுங்கூசுதையா. (௪௰)

உத்தியோகஞ்செய்யும்போலீசுசார்ஜண்டு-உற்றுப்பார்த்தாலவர்மெத்தவுண்டு, உருமாறியெ-மறுவேசமாய்- வருவாரவர் - தெருவீதியில் உன்னிதம்பாருங்கள்முன்னிலையில். (௪௧)

உப்புக்காரச்செட்டி அன்னதானஞ்செயும்- உத்தமதர்மங்கள்மெத்தவுண்டு, ஓயிலாகவெ-தயிர்பாலுடன்-கையில்வாரியெ- யயில்வார்க்கிடும்-உத்தமர்தர்மத்தைப்பாருமையா. (௪௨)

பார்க்கப்பார்க்கப்பதினாயிரங்கண்வேண்டும்- பால்க்காவடி வரும் காரணத்தை,பாரும்விழி-நேராகவெ-கூறும்படி-இருங்கலி- பாவந்துலைந்திடுமின்றுடனே. (௪௩)

மச்சம்பிடித்துக்கறிசமைத்துப்பக்தர் - வைத்திடுங்காவடிபாருமையா, மலையாமலெ-சிலபேர்களில்-மெலிவானவர்-புலிபோலவே-வந்தவர்பாவாடம்போடுவதும். (௪௪)

உ

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
R. M. DIST - TAMIL NADU

சேவலறுக்குக்கதிசமைத்துச்சிலர்- சிங்காரக்காவடிகட்டிவந்து, செபவேலவர்-செபலாலது-ஓயிலாகவெ-யுயிர்பெற்றெழச் -செய்யுமதி சயம்பாருமையா. (சரு)

தஞ்சந்தஞ்சமென்றே யஞ்சலிசெய்துபின் சாமியை யன்புடன் போற்றிசெய்து, தாவிக்களை-யோவக்குளிர்-வாவிப்புனல்- ஆவிக்கிளை ஞ்து தணிந்தபின்தானெழுவார். (சசா)

ஆனந்தமாகவேஅரகரமுருகவென் றுலயஞ்சுற்றிவலமாக, ஐயன்பதம்-மெய்யன்பொடு-செய்யுந்துதி-மொய்யென்றிட - ஆனந்தம்பாருங்கள்சாதுக்களே. (சஎ)

அபிஷேகமானபின்றாதனைகண்டு- ஐயன்பொற்பாதம்பணிந்த பின்பு-அரிதாகிய-கிரிமீதினில்-சிரமீதிரு-கரமேறவே- அரகரவென்றவர்பாருமிப்போ. (சஅ)

சரியற்றபாவங்கள் கிரகத்தின் பீடைகள் சண்முகநாதன்விலக்கிடுவான்-சரணாகதி-யரனார்தரு-முருகாவென-உருகாமுனம்- தட்சணம் பாருங்கள்சாதுக்களே. (சகூ)

மண்டலம்விண்டலமாரேழுலகமும் வரந்தந்துகாக்குமுருகையனே, மயில்பைங்கிளி-குயில்தங்கிய-ஒயிலும்பல-செயலுங்கொடு- வளரும்பழனிமலைக்குமரன். (ருய)

உற்றவர்பெற்றவர் மற்றவரொன்குலத் துள்ளவர்க்கும்மனத்துள்ளவர்க்கும், உன்பேரருள்-அன்போடருள்-முன்பேரர்தமி- முன்பேவினி-உற்றதுணையுனையன்றியுண்டோ. (ருக)

பகைவர்களெதிரிகள் புதைமருந்துய்த்திடும் - பாதகர்தமையெலாம்வேரறுப்பாய்,பரனேகுரு-பரனேதரு-வரனேயுபர் - அரனேசிவபாலனேவைவடிவேலவனே. (ருஉ)

மாந்தரீகத்தொழிலேவிடும்பாவிகள்-மார்பைப்பிளந்திடுன்சூலத்தினால்,மயிலும்முனை-யயிலும்மினை- செயலுள்ளவர் - பயமில்லவர்-மாநிலமீதிலென்றுர்குகனே. (ருங)

எளியவர்தங்களைவலியரொதிர்த்திடில் - இருபிளப்பாருமவர்பிரசே, எதனுலெனில்-ஈகைதகேர்மொழி-யுதவும்பக-வதிசேய்விடு-மிணையிலாச்சக்திவேலாயுதத்தால். (௫௪)

வேறுகதியில்லேனாயேனைக்காத்தருள் - வெற்றிவேலாயுதசித்தம்வைத்து, வேலாமயில்-லோலாருண-சீலாபரி-பாலாதுணை - வேளையிதுதுணைவாருமையா. (௫௫)

அன்பர்கள்சிந்தையில்நம்பிக்குடிகொள்ளுமாறுமுகப்பொருள்நீரல்லவா, ஐயாவருள்-மெய்யாகவே-செய்யாமுரு-கையாவினி - அன்பனையாதரியென்குருவே. (௫௬)

கும்பமுனிக்கருள்தந்தமுத்தையனே யெந்தனைக்காத்தருள்கந்தப்பனே, கோரும்வரம்-தாரும்வினை-தீரும்விழி-பாரும்மினி - கோதற்றஞானகுருவடிவே. (௫௭)

சரவணப்பொய்கையிற்குழந்தைவடிவாகிச் சந்திரன்நாணவிளக்கிடுவோய், சகமீதுள-நகம்யாவதும்- மிகுகாதலோ - டகமாக்கியே-சஞ்சரித்தாடுபொதாம்புயனே. (௫௮)

மாமரமாய்வருசூரன்முதலான வஞ்சகர் யாரையும் மாள்வைத்தாய்,வடிவேன்மணி-அடியாடிட-வடியேன்வினை-குடியோடிட-வந்தெனைக்காத்தருள்சுந்தரனே. (௫௯)

இந்தவிதமாகவந்தவடியார்கள்-எல்லோருங்கூடியேதோத்திரித்து, எழிலோங்கிய-பொழில்நீழலில்-விளையாடுவர்-களிமீறவே - யென்னென்றுசொல்லுவோம்சாதுக்களே. (௬௰)

சித்தரும்பத்தரும் முத்தருங்கூடியே- தேசிகன்மேற்பாடுங்கீதங்கள்பார், செஞ்சோதியும்-கஞ்சாவையும்-மிஞ்சாமலு-நிஞ்சாதவர் சித்தர்களாகாரோசாதுக்களே. (௬௧)

கோடானுகோடியாயவானாக்கூட்டங்கள்-கோபுரமெங்கணும்பாருமையா, கூவுங்கனி-மாவுந்தரத்-தாவும்மலே-மேவுஞ்சில -கொண்டாட்டஞ்செய்வதுபார்த்திடுங்கோ. (௬௨)

குட்டியைத்தாவிக் கொண்டோடுவதும்-சில கோபுரமேறிக்குதிப்பதுவும், குறையாமலெ-ஒருபாகமாய் மரமேறியெ உறவாடிய-கோலத்தைப்பாருங்கள்சாதுக்களே. (௬௩)

சற்குருநாதற்கபிஷேகமானபின் - சாமிபிரசாதம்வாங்கிவந்து, தண்மீறிய-மண்பானையில்-பண்பாகவெ-நண்போடுவைத்-தாதரவாய்க்கட்டிமூடிவைத்து. (௬௪)

கூடியடியவர்கெஞ்சினிற்றியானித்துக்-கும்பலாயெல்லோருமின்பமுடன், குருமாமுனி-வரர்யோகியர்-உறைமூழைகள்-குறைபாமலே குகைகள்பலபலபார்த்தவுடன். (௬௫)

இடும்பன்கடம்பனைப்போற்றிபுரிந்தபின்- இப்புறந்தாண்டியிறங்குகையில், இனிதாயொரு-மனதாகவெ-மனையேகிட-நினைவாகியே- எழில்வடிவேலனை த்தியானஞ்செய்து. (௬௬)

இப்புறமவருகுவார்சுப்பையன்மகிமையை - யென்னுலுரைத்துமுடிவதுவோ, எளியோர்களும்-வளமோங்கிட-கனைநீங்கவே -யளித்தந்தவன்-எல்லோர்க்குங்காரணமூர்த்தியவன். (௬௭)

ஆதிசேடனுலுஞ் சொல்லமுடியுமோ - ஆனந்தத் திருக்கூட்டவைபவத்தை, அரிதாகிய-முனியோர்களும்-வயதேறிய- பெரியோர்களும் அமர்ந்திடும்வீதியையென்னசொல்வோம். (௬௮)

இங்கிதமாகவே ஐங்கரன்பொன்னடி யேற்றிப்பணிந்தவர்போற்றிசெய்து, எல்லோர்களும்-சல்லாபமா-யுல்லாசமாய் - செல்லாநெறி-யென்னென்றுசொல்லுவோம் சாதுக்களே. (௬௯)

வையாபுரிக்குளம் கடைமுதற்பட்டணம் வழித்தெருவெங்கும் பழக்கடைகள், வாசந்தொடு-தேசத்தவர்-பூசைக்கென- ஆசைக்கனி-வாங்கிடுவைபோகம் பார்த்திடுங்கள். (௭0)

என்றென்றுகூறியேயவரவர்சாகைக ளிருப்பிடஞ்சென்றேயிறங்கியபின், எதிராகவெ-யதிர்பேரொலி மிதமீறவெ-ரதமேறியே - எம்பிரான்வருகிறசம்பிரமம்பார். (௭௧)

அண்டசராசர மெங்குமதிர்ந்திட-வானந்தபேரிக வில்முரசு,அ
டிவேதியர்-சதுர்வேதமும்-எதிரோதிய-விதம்யாவதும்-அன்புடன்பா
ருங்கள்சாதுக்களே. (௭௨)

எத்தினைவாணங்கள் எத்தினைவர்த்திகள் - எத்தினைபந்தங்களெ
ன்றுசொல்வோம், எதிராகவெ-சதிராடவும்-அதிகாரிகள்- குதிபோட
வும்-எங்கெங்குமங்களக் கோலமுடன். (௭௩)

பள்ளித்தெருவினிற் செல்லக்குமாரிகள்-பாடியகொம்மிக ளோ
சைகளும், பாட்டைப்பெறு-கூட்டத்தினில்-ஆட்டத்துடன்-கேட்டிப்
புறம்-பரிவாய்ச்சுற்றிவலம்வருவார். (௭௪)

கைலேசனைத் தரிசனைசெய்யவே-காலையிற்சண்முக நதிபடி
ந்து, கரங்கூப்பியே-வருவீர்சக-பரிபாலன-துரைசந்நிதி- சற்றாண்ப
ளிக்குமாமண்டபத்தில். (௭௫)

முப்புரஞ்செற்றந்த வானவராக்காக்கு - முக்கண் நடேசனைப்
போற்றிசெய்து, முதிருஞ்சுவை-மதுரஞ்செறி-விதமின்றமி-ழதுபாடி
யே மும்முறைசூழுங்கள் சாதுக்களே. (௭௬)

பார்வதிபாதம் பணிந்துதவஞ்செயும் பத்தரைப்பாருங்க ளெத்
தினைபேர், பரிபாலனி-திரிசூலினி-கரியோனுடன்-வருகாரணி- பங்க
யம்போற்றுங்கள் சாதுக்களே. (௭௭)

எண்டிசைமேவு மடியாரைக்காத்தருள்-ஈசுவரிபாதம் பணிந்தெ
ழுந்து, இடமாகவெ-வடவீதியில்-திடமோடுநன்-னடமாதர்கள் - இங்
கிதம்பாருங்கள் சாதுக்களே. (௭௮)

அவரவர்கோரிக்கை சந்நிதியிற்சொல்லி ஆலயம்விட்டுக் கடை
த்தெருவில், அகலாமுனம்-பகல்போலொளி-மிகுதீறுகள் வகையாக
வே-அலங்காரங்காணுங்கள் சாதுக்களே. (௭௯)

ஆனைக்காரன்பட்டத் தானைசிங்காரித்து- ஐயன்ரதந்தின்முன்று
தரிகச, அனைவோர்களும்-கனிகாப்தர-சினமாறியெ - யினிதாயுணும்
அன்பதுகாணுங்கள் சாதுக்களே. (௮௰)

ஐயன்றரிசன வைபோகம்பார்த்துப்பின்-அவரவர்சாகாவி லடி பி ல்முற்றி, அன்புமேலிடு-தம்பிரான்களுக்-கின்பமாய்வெகு-சம்பிரமத் தொடு-மன்னம்பணிமாறியாதரித்து. (அ௧)

சூரியன்சாயவே பஞ்சணை மீதினிற்- றுயின் றருணோதயம்தானறி ந்து, தூயகங்கையில்-நேயமாகவே-நேமநிஷ்டைகள்- தாமுடித்தபின் துலங்கிந்தவரூர்களுக்கேகிடவே. (அ௨)

பஞ்சவன்னக்கிளிகுயில்முதலாயுள்ள பட்சிகள்பாடுநல்லோசை கண்டு, பரிபாலன-துரையாகிய-குருவேலவன்-பெருமான்புகழ்-பலவு ம்கிளைந்துபரிவுடனே. (அ௩)

பட்டணச்சிங்காரம் மூற்றிலும்பார்த்துப்பின்- பானிறவெண்ணீ றும்பற்றிக்கொண்டு, பசியாமலே-ருசியாகிய-கசிதேங்கனி-புசியாசிவ பாலனைவேண்டிப்பின்னூர்புகுவார். (அ௪)

அவரவரூர்வந்து சேர்ந்தபின்பலர்வந்து-ஐயன்தரிசனங்கண்டுவ ந்தீர், அரிதாகிய-திருநாளினில்-குருநாதன்செய்- பரிசோதனை அதிச யஞ்சொல்லென்றுகேட்டிடவே. (அ௫)

பார்த்திடும்பேர்க்குப் பத்தாயிரங்கண்வேணும் -பழனித்தலத்தி ன் சிறப்பையெலாம், பண்பாயது-கண்பார்த்திட-வன்பாவம்- கன்றோ டிடும்-பத்திமிகுந்துபணிந்தவர்க்கு. (அ௬)

எந்தெந்த அதிசயங் கண்டுசொல்வோமந்த -எங்கள்முருகையன் சந்நிதியில், எப்பாவமும்-அப்பாற்செல - நிற்பான்றுணை - நற்பாவல னென்னும்குருபரசண்முகனே. (அ௭)

அவரவர்செய்திடுங் குற்றங்கட்கேற்கவே - ஆக்கினைசெய்குவர்த ப்பாமல், அயிலாயுதம்-கையிலேந்தியெ-மயின்மீதருள்-செயலாகவே ஆறுமுகத்தொடும்வந்திடுவார். (அஅ)

அன்னமும்பாலொடு மச்சமுஞ்சர்க்கரை-அதிரசம்கட்டிய காவ டிகள், அரனேசிவ-பரனேயென-துரிசாகவெ-வருகாவடி-அனந்தமும் சொல்லிமுடியாதே. (அ௯)

தந்தைக்குபதேசந் தந்தமுத்தையனே-சற்குருவேயென்றுதாள் பணிந்தால், சண்டன்னினி-யண்டான்நமை யண்டம்பல - தெண்டன் னிடும் சர்வமும்சித்திக்குந்தாரணியில். (௬௰)

ஆறுமுகம்பன்னிரண்டுதிருக்காம்- அழகாய்விளங்க மயிலேறி, அடியேனிட-விடரோடிட-வடிவேலொடு-துடியாகவே அனுதினம்வந் தென்னைக்காத்திடுவான். (௬௧)

எத்துணைகுற்றங்கள் யான்செயினும்பொறுத் தெந்தனையாளக்க டனுனக்கே, இந்நாளினில்-என்னாலொரு-புன்னாவசை- மன்னாதெனி ல்-என்றொழிலுன்னையல்லாலுளதோ. (௬௨)

அவனசையாமலோ ரணுவசையா தென்ற வருமறைவாக்கியம் பொய்ப்படுமோ, அடியேன்விரி-படிமீதினில்-உடையாயுனப்- படியாடு வேன்-ஆர்பரங்காப்பதுசொல்குருவே. (௬௩)

என்றிந்தவிதமா வெங்கள்முருகேசன் இணையடிபோற்றியிருந் தவர்கள், ஏமன்கரம்-தாமன்னிய-தீமன்கதை-யேவெல்லுவர்-ஏதும்பி ழையில்லையிம்மொழியில். (௬௪)

அரனரிபிரமனுந்தேவருமூவரும் அருந்தவமுனிவோரும் வாழி யவே, அருளேதரு-கிரியின்சுதை-திருமாமக-ளொருவாணியும் - ஐங்க ன்னிமார்களும் வாழியவே. (௬௫)

காஞ்சிகாமாட்சியும் மதுரைமீனாட்சியுங் காசிவிசாலாட்சிவாழி யவே, கருணாகரி-பரிபூரணி-திரிசூலியெ-யொருநாரணி-காத்தென்னை யாண்டிட வாழியவே. (௬௬)

குன்றுகள்தோறாடு குமரனுகந்திட்ட குஞ்சரிதன்பதம் வாழிய வே, குறமாமகன்-அறமாமகள்-இருபாதமும்-ஒருவாதெழிற் -கோகில வள்ளிமான் வாழியவே. (௬௭)

செகமீதுதவயோக சித்தர்கள்கௌமாரர் சீர்பாதமென்றென்று வாழியவே, செங்குந்தரு-மொங்கும்புகழ்-பொங்கும்படி மங்காமலே சி றப்புடனெந்நாளும் வாழியவே. (௬௮)

மாசில்லாமாணிக்க தேசிகர்சிர்பாதம் மாருமலெந்நாளும்வாழி யவே, மாமணித்திரள்-தாமணிந்திடும்-நேமபிட்டையி-லேயிருந்தவர் வரமருள்குருபாதம் வாழியவே. (௯௯)

பத்தியாயிக்கும்மி பார்ப்பவர்களிதைப் பட்டோலை கொண்டு பதிப்பவர்கள் பாரின்மிசை நேரும்பொருள் - சேரும்படி - சீரொன் றியெ-பரமனருள்கொண்டு வாழ்ந்திடவே. (௧00)

இந்திரன் முதலாயுள்ள இமையவர் வாழிவாழி
சந்திர னிரவிவாழி சரஸ்வதி திருத்தாள்வாழி
சுந்தரப் பெருமாள்வாழி சூரசம்மாரன் வாழி
இந்தநற் கும்மிநூறு மெழுதினோர் படித்தோர்வாழி.

ஸ்ரீவல்லிதேவிமனோகராயநம:

சுப்பிரமணியர் தரிசனக்கும்மி

முற்றிற்று.



செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901
https://senguntharmudaliarhistory.blogspot.com